உ
சிவமயம்

# செய்தி மடல்

அகில இலங்கை இந்து மாமன்றம்
ALL CEYLON HINDU CONGRESS

விரோதி வருடம்
ஆவணித் திங்கள்
18ம் நாள்
03.09.2009

தலைமையகம் : இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. இலங்கை
தொலைபேசி : 011 2434990 – தொலைநகல் : 011 2344720, மின்னஞ்சல்: hinducongress@gmail.com

## இந்து மாமன்றத்தின் முயற்சிக்குப் பலன் கிடைத்தது

### இந்த மடலில்....



வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த இந்துமத குருமார்களை 26.08.2009ல் மாமன்றம் பொறுப்பேற்ற நிகழ்வின்போது மாமன்ற உபதலைவர் திரு. சின்னத்துரை தனபாலா, பிரதிச் செயலாளர் திரு. மு. கதிர்காமநாதன், துணைச் செயலாளர் திரு. ஞா. கேதீஸ்வரன் ஆகியோர் நிவாரணப் பொருட்களை வழங்குகிறார்கள்.

(பக்கம் - 3)



கனடிய இந்து நிறுவனம், மாமன்றத்தின் ஊடாக வழங்கிய சுனாமி நிவாரண நிதியுதவியுடன் மாமன்ற மேற்பார்வையில் கட்டப்பட்ட தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலக் கட்டிடம் 17.08.2009ல் திறந்து வைக்கப்பட்டபோது, கொழும்பு மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளுடன், கனடிய இந்து நிறுவன இணைப்பாளர் திரு. கே. வெங்கட்ராமன் தம்பதியினர், மாமன்றத் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் பிரமுகர்களுடன், குருகுலப் பிள்ளைகள். (பக்கம் - 4)

**மாமன்றத்தின் புதிய இணையத்தள முகவரி:**
www.hinducongress.lk

### இந்து மத குருமார்கள் விடுவிக்கப்பட்டனர்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நிவாரண முகாம்களில் தங்கியிருந்த இந்து மத குருமார்களது 116 குடும்பங்களைச் சேர்ந்த 431 பேர் ஆகஸ்ட் 26ம் திகதி புதன்கிழமையன்று விடுவிக்கப்பட்டு, அகில இலங்கை இந்து மாமன்றத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளனர். இவர்கள் வவுனியா யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்து மத குருமார்கள் பலரும் அவர்களது குடும்பத்தினரும் நலன்புரி முகாம்களுக்கு வந்து சேர்ந்த காலத்திலிருந்தே மாமன்றம் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வந்திருப்பதுடன், அவர்களை முகாம்களிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கும் பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. மாமன்றத்தின் இந்த முயற்சிகளுக்கு இறையருளால் பலன் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இது விடயம் தொடர்பான மேலதிக தகவல்கள் இந்தச் செய்தி மடலின் உள்ளே வெளியாகியிருக்கின்றன.

### யாழ். அலுவலகத்தில் கணனிப் பயிற்சி

மாமன்றத்தின் யாழ். அலுவலகத்தில் கணனிப் பயிற்சிகளை வழங்குவதற்கு மாமன்றம் ஒழுங்குகளைச் செய்து வருகிறது. Infoshare Guarantee Limited நிறுவனம் மாமன்றத்திற்கு 12 உயர் ரகமான கணனிகளை வழங்குவதற்கும், அது தொடர்பான பயிற்சிகளை அளிப்பதற்கும் முன்வந்துள்ளது. மேற்படி நிறுவனத்துடன் இதற்கான ஒப்பந்தமொன்றில் மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், மாமன்றப் பொருளாளர் திரு. வி. கந்தசாமி ஆகியோர் கடந்த ஆகஸ்ட் 31ம் திகதியன்று கைச்சாத்திட்டுள்ளனர்.



## வாழ்த்து

மாலொடு அயனும் காணா மலரடி நீடு வாழ்க
காலனைக் காய்ந்த காலன் கழலடி இனிது வாழ்க
ஆலமதுண்ட அண்ணல் அருள்நெறி போற்றி நாளும்
சலமது நீங்கி என்றும் இன்புற்று நீடு வாழ்வாம்!

**விரோதி வருடம் ஆவணித் திங்கள் 18ம் நாள் (03.09.2009)**

# மாமன்றத்தின் குரல்

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கம். மாமன்றத்தின் மற்றுமொரு செய்தி மடல் ஊடாக உங்களைச் சந்திப்பதில் மனநிறைவு கொள்கின்றோம். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செய்திகளையும் மற்றும் செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களையும் அறியத்தரும் வகையில் இந்தச் செய்திமடல் வெளியிடப்படுகிறது.

பெரும்பாலான தமிழ் மக்கள் பலவித இழப்புகளுடனும் துயரங்களுடனும் இடம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், அவர்கள் அனைவருக்கும் உதவுவது இந்து மக்களாகிய எங்கள் கடமையாகும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். அந்த வகையில் அகில இலங்கை இந்து மாமன்றமும் இவ்வருடம் மாசி மாதத்திலிருந்து தன்னால் இயன்றவரையில் உதவி வருகிறது. இதுபற்றிய தகவல்கள் இந்தச் செய்தி மடலில் வெளியாகியிருக்கின்றன.

மாமன்றத்தின் மனிதநேயப் பணி தொடருகிறது. இந்த நற்பணியில் இந்து மக்கள் அனைவரும் இணைந்து கொண்டு ஆதரவும், உதவியும் தரவேண்டும் என்பதே எங்கள் விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகள் முற்றாகவே நீங்கி, மக்கள் அனைவரும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும்; அதற்கானதொரு ஒளிமயமான எதிர்காலம் விரைவில் அமைய வேண்டும். இதுவே எங்கள் அனைவரினதும் விருப்பமும் எதிர்பார்ப்புமாகும். இதற்காக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக!

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*

# அமரர் பாலா நினைவுப் பேருரை

மாமன்றத்தின் முன்னாள் தலைவரான அமரர் வே. பால சுப்பிரமணியம் அவர்களது சேவையைப் போற்றும் வகையில் அவரது நினைவு நாளிலே மாமன்றம் வருடந்தோறும் நடத்தி வரும் நினைவுப் பேருரைத் தொடரில், அவர் அமரத்துவமடைந்த பதினேழு வருட நிறைவின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்வருடப் பேருரை கடந்த ஆகஸ்ட் மாதம் 5ம் திகதியன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் "சைவம் எதிர்வு கூறும் சில புதிய பிரச்சினைகள்" எனும் பொருளில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் நினைவுப் பேருரையாற்றினார்.

இந்த வைபவத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் அமரரின் துணைவியார் திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம் அவர்கள் தேநீர் விருந்துபசாரம் வழங்கினார்.

## "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்"

(சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது சமய சமூக நலப் பணிகளையும் எடுத்துச் சொல்லும் நூல் இது. அம்மையாரின் வாழ்விலிருந்து சில நிகழ்வுகள் புகைப்படங்களாகவும் இணைக்கப்பட்டுள்ளன)

**விலை :- 500/= ரூபா (தபாற் செலவு 170.00 ரூபா)**

மாமன்றத் தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்

# இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுங்கள்

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்கள் போதுமான உணவு மற்றும் உடுபுடவை போன்ற அத்தியாவசிய வசதிகள் குறைந்த நிலையில் தொடர்ந்தும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர். இந்த வேளையில் அவர்களுக்கு உதவுவது இந்து மக்களாகிய எங்கள் தலையாய கடமையாகும். எனவே, அகில இலங்கை இந்து மாமன்றம் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் உடுப்புகளை கொழும்பு மகளிர் இந்து மன்றம், விவேகானந்த சபை உட்பட அதன் அங்கத்துவ சங்கங்களின் ஆதரவுடன் சேகரித்து இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்களுக்கு விநியோகித்து வருகிறது.

இதற்காக பிஸ்கட், தண்ணீர்ப் போத்தல்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் புதிய உடுப்புகள், படுக்கை விரிப்பு, துவாய், சாரம், சேலை, பாதணிகள் போன்றவைகளை தொடர்ந்தும் வழங்கி உதவுமாறு சகல இந்து மக்களையும் மாமன்றம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றது. விரும்புவோர் நிதியுதவிகளையும் செய்யலாம்.

நலன்புரி முகாம்களில் போஷாக்கின்றி வாடும் சிறுவர்களுக்கு பீடியா சுகர் (Pedia Sure) என்ற பால்மா வகையை மருத்துவர்கள் சிபார்சு செய்திருப்பதால், இவை பெருமளவு தேவைப்படுகின்றன. இவற்றையும் வழங்கி உதவலாம்.

**நிவாரணப் பொருட்களையும், நிதியுதவியையும் பின்வரும் சேகரிப்பு நிலையங்களில் வழங்கலாம்.**

**சரஸ்வதி மண்டபம்**
75, லோறன்ஸ் வீதி, கொழும்பு–04 (தொலைபேசி : 2585975)

**கொழும்பு மகளிர் இந்து மன்றம்**
15, பகத்தல வீதி, கொழும்பு–03 (தொலைபேசி : 2505938)

**விவேகானந்த சபை**
34, விவேகானந்த மேடு, கொழும்பு–13. (தொலைபேசி : 2422646)

**நிதியுதவியை மாமன்றத்தின் வங்கிக்கணக்கிலும் வைப்புச் செய்யலாம்.**

**இலங்கை வங்கி – லேக்ஹவுஸ் கிளை**
(Bank of Ceylon - Lake House Branch)
கணக்கு இல: (A/C No:) 0003268614
Branch Code No : 636
Swift Code No : BCEYL KLX

# ஆதரவற்ற முதியோர்களை மாமன்றம் பொறுப்பேற்றது

இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த முதியோர்கள் பலரை இம்மாதம் 2ம் திகதயன்று அகில இலங்கை இந்து மாமன்றம் பொறுப்பேற்றுக் கொண்டது.

மாமன்றம், சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் செயலாளர் திருமதி வி. ஜெகராசசிங்கம் ஆகியோரிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று இவர்கள் ஒப்படைக்கப்பட்டார்கள். இந்து மாமன்றத்தின் சமூக நலன் குழுத் தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா தலைமையிலான பிரதிநிதிகள் வவுனியா நலன்புரி முகாமுக்குச் சென்று முதியோர்களை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மான்றத்தால் பொறுப்பேற்கப்பட்ட முதியோர்கள் 47 பேர் மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் அமைக்கப்பட்டுள்ள முதியோர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறார்கள். நலன்புரி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட 46 முதியோர்கள் வவுனியாவிலுள்ள முதியோர் இல்லமொன்றில் தங்கவைக்கப்பட்டிருப்பதுடன், ஏனையோர் அவர்களது உறவினர்களுடன் இணைந்து கொண்டனர்.

## புதிய நியமனம்

மாமன்றத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக கல்வி அதிகாரி திரு. ஆ. ஸ்கந்தமூர்த்தி அவர்களை கௌரவ இணைப்பாளராக மாமன்ற நிறைவேற்றுக் குழு நியமனம் செய்துள்ளது.

# விடுவிக்கப்பட்ட இந்து மத குருமார்களை மாமன்றம் பொறுப்பேற்றது

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியாவிலுள்ள நிவாரண முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை மிக விரைவாக அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என அகில இலங்கை இந்த மாமன்றம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளது.

இந்தவகையில், இந்து மத குருமார்கள் பலரும், அவர்களது குடும்பத்தினரும் நலன்புரி முகாம்களுக்கு வந்து சேர்ந்ததும், மாமன்றம் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வந்ததுடன், அவர்களை முகாம்களிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கும் முயற்சிகளை எடுத்து வந்தது. இது தொடர்பாக அரசாங்கத்திடமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களிடமும், வடக்கின் வசந்தம் செயலணித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பசில் ராஜபக்ஷ அவர்களிடமும் மாமன்ற நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்து வந்ததுடன், அவர்களைப் பல தடவைகள் நேரில் சந்தித்தும் கோரிக்கையை முன்வைத்தனர்.

அதன் பிரகாரம், அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து மாமன்றத்திற்குக் கிடைத்த 2009.08.25ஆம் திகதியிடப்பட்ட தொலைநகல் கடிதத்தில், 26.08.2009 புதன்கிழமையன்று 177 இந்து மத குருமார்களும், அவர்களது 573 குடும்ப அங்கத்தவர்களும் வவுனியா நிவாரண முகாம்களிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்றும், விடுவிக்கப்படும் இந்து மத குருமார்களும், அவர்களது குடும்பத்தினரும் அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் கையளிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, மாமன்றப் பிரதிநிதிகளாக மாமன்ற உபதலைவரும் மாமன்ற சமூகநலன் குழுத் தலைவருமான திரு. சின்னத்துரை தனபாலா, மாமன்ற பிரதிச் செயலாளரும், சமூக நலன் குழுச் செயலாளருமான திரு. மு. கதிர்காமநாதன், மாமன்ற உபசெயலாளர் திரு. ஞா. கேதீஸ்வரன், மாமன்ற அறங்காவலர் சபை உறுப்பினரும், மாமன்ற அங்கத்துவ நிறுவனமான மன்னார் மாவட்ட இந்து ஆலயங்கள் ஒன்றியத்தினது தலைவருமான வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன் ஆகியோர் வவுனியா சென்று மத குருமார் கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வில் சமய விவகார அமைச்சர் கௌரவ பண்டு பண்டாரநாயக்கா, கௌரவ டக்ளஸ் தேவானந்தா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், மாமன்ற உபதலைவர் திரு. சின்னத்துரை தனபாலா உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

இந்த நிகழ்வின்போது இந்து மத குருமார்களது குடும்பங்களைச் சேர்ந்த 431 பேர் விடுவிக்கப்பட்டனர். இவர்களுள் 44 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேர் வவுனியாவிலுள்ள அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். 8 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டு திருக்கேதீஸ்வரத்திலுள்ள சிவராத்திரி மடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுதவிர, 6 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் கிழக்கு மாகாணத்திற்கும், மிகுதி 56 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது விடயத்தில், சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர், அமைச்சு செயலாளர் திருமதி வி. ஜெகராசசிங்கம், அமைச்சு அதிகாரிகள், வவுனியா அரச அதிபர், வவுனியா அரச செயலக அதிகாரிகள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் பெரிதும் உதவியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 27ம் திகதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் வவுனியாவிலிருந்து பேருந்தில் புறப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த இந்து மத குருமார்களும், குடும்பத்தினரும் அன்றைய தினம் நள்ளிரவு 12 மணியளவில் யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தனர். அங்கு யாழ் அரச அதிபர் திரு. கே. கணேஷ், மாமன்ற உபதலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் மற்றும் யாழ் இந்துக் குருமார் ஒன்றியத்தினர் மற்றும் சமயத் தலைவர்கள் ஆகியோர் அவர்களை வரவேற்றுத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தனர். பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் அன்றிரவும், மறுநாளும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள ஏனைய இந்துமத குருமார்களையும், அவர்களது குடும்பத்தினரையும் விரைவில் விடுவிப்பதற்கான ஒழுங்குகளை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, அமைச்சு செயலாளர் திருமதி வி. ஜெகராசசிங்கம் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருடன் இந்து மாமன்றத்தினரும் மேற்கொண்டு வருகிறார்கள்.

### "தெய்வத் திருமகளின் வாழ்வும் பணிகளும்"

## நூல் அறிமுக விழா

தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது முதலாவது குருபூசையையொட்டி மாமன்றம் வெளியிட்டிருந்த மேற்படி நூலின் அறிமுகவிழா கடந்த ஆகஸ்ட் மாதம் 9ம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், உலக சைவப் பேரவை தலைவர் சிவத்திரு யோகானந்த அடிகள், தினக்குரல் நிறுவன அதிபர் திரு. எஸ்.பி. சாமி, வீரகேசரி வார வெளியீடுகளின் பிரதம பொறுப்பாசிரியர் திரு. வி. தேவராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டார்கள்.

இறைவணக்கத்தைத் தொடர்ந்து கொழும்பு மகளிர் இந்து மன்றத் தலைவி திருமதி வனஜா தவயோகராஜா அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பிரபல திறனாய்வாளரும், ஒலிபரப்பாளருமான திரு. கே.எஸ். சிவகுமாரன் நூலை ஆய்வு செய்தார். மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நன்றியுரை வழங்கினார்.

## குருமார்களின் குடும்பத்தினருக்கு மாமன்றத்தின் நிவாரணப் பொருட்கள்

கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இந்த மத குருமார்களின் குடும்பத்தினருக்கு அவர்களைப் பொறுப்பேற்பதற்காக வவுனியா சென்றிருந்த மாமன்றப் பிரதிநிதிகள் நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்கள்.

வேட்டி, சேலை, படுக்கை விரிப்புகள், மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்கள், பிஸ்கட், "பீடியா சுகர்" என்ற குழந்தைகளுக்கான புரதச் சத்துப் பாலுணவு மற்றும் சிறுபிள்ளைகளுக்கான பால்மா வகைகள், பிரார்த்தனைப் பாடல்கள் அடங்கிய சிவ வழிபாட்டு மலர் நூல்கள் போன்றவைகள் மாமன்றப் பிரதிநிதிகளால் வழங்கப்பட்டன.

## சிறுவர்களையும் மாமன்றம் பராமரிக்கத் திட்டம்

வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள ஆதரவற்ற சிறுவர்களையும் மாமன்றம் பொறுப்பேற்றுப் பராமரிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறது. இந்த வகையில் இரத்மலானையில் இவர்களுக்கான இல்லங்களை அமைத்து அவர்களை அங்கு தங்கவைத்துப் பராமரிக்கப்படவிருக்கிறார்கள்.

## மலையகத்தில் ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு

மாமன்றம், மலையக இந்து நிறுவனங்களுடன் இணைந்து ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்குகளை இம்மாதம் 4ம் திகதி முதல் 6ம் திகதி வரை மாத்தளை, பேராதனை, நாவலப்பிட்டி, ஹப்புத்தளை, தொட்டலாகலை ஆகிய இடங்களில் நடத்துகிறது.

இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் திண்டுக்கல் வள்ளலார் குருகுலத்தின் மடாதிபதி தவத்திரு யோகானந்த சுவாமிகள் அவர்களும், மதுரை யோகாமிர்தம் அறக்கட்டளை நிறுவனத்தைச் சேர்ந்த ஞானச்செல்வி அமிர்தம் அவர்களும் மேற்படி மூன்றுநாள் கருத்தரங்குகளிலும் சிறப்புரையாற்றுகிறார்கள்.

## தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் திறப்பு விழா

சுனாமி அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் – தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலக் கட்டிடம் புனரமைக்கப்பட்டு கனடியன் இந்து நிறுவனத்தின் நிதியுதவியுடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்டது. இந்தப் புதிய கட்டிடத்தின் திறப்பு விழா வைபவம் கடந்த ஆகஸ்ட் மாதம் 17ம் திகதியன்று நடைபெற்றது. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார். கனடாவிலிருந்து வருகை தந்திருந்த கனடிய இந்து நிறுவனத்தின் இணைப்பாளர் திரு. கே. வெங்கட்ராமன் தம்பதியினர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அஜராத்மானந்தா மகராஜ், மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தம்பதியினர், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் தம்பதியினர், மாமன்ற உபதலைவர் திரு. எஸ்.ரி.எஸ். அருளானந்தன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## நூல்கள் வழங்கும் வைபவம்

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை குடும்பத்தினரின் நிதியுதவியுடன், மாமன்றத்தினால் வெளியிடப்பட்ட அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்களின் சிவாகமசேகரம் பிரதிஷ்டா விதி (முதலாம் பாகம்) சிவலிங்கப் பிரதிஷ்டா விதி (இரண்டாம் பாகம்) ஆகிய இரு நூல்களையும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கு வழங்கும் வைபவம் இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலக மண்டபத்தில் இடம்பெற விருக்கிறது.

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த வைபவத்தில் யாழ். அரச அதிபர் திரு.கே. கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் சிறப்புரையும் இடம்பெறும்.

## இரத்மலானை மாணவர் விடுதி

போர்ச் சூழ்நிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெற்றோர்களை இழந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள பிள்ளைகளின் நலன்கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையில் ஓர் இலவச விடுதியை ஆரம்பித்து நடத்திவருவதை உங்களில் பலர் அறிவீர்கள். 1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதி பதினொரு ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது சிறப்புக்குரிய விஷயம். தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெண் பிள்ளைகளுக்காக "சக்தி இல்லம்" என்ற பெயரில் இன்னொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது.

மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் மேற்படி இரு விடுதிகளிலும் 150க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வசதிகளுடன், மேலதிகமாக தனிப்பட்ட வகையில் கல்வி போதிப்பதற்காக பிரத்தியேக வகுப்புகளையும் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. விடுதியில் மாதந்தோறும், ஒரு விடுமுறை நாளில் அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளது பிறந்த தினமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் வதியும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் போசனம் வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம்.

**இதற்கான நன்கொடை விபரம் பின்வருமாறு அமைகிறது:**

| | | |
|---|---|---|
| காலைப் போசனம் : | 7500/– | ரூபா |
| மதிய போசனம் : | 10000/– | ரூபா |
| | 12500/– | ரூபா (விசேடம்) |
| இரவுப் போசனம் : | 10000/– | ரூபா |
| | 12500/– | ரூபா (விசேடம்) |

போசனத்திற்கான நன்கொடை அல்லது வேறு வகையில் உதவ விரும்புபவர்கள் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல : 011 – 2625588) அல்லது அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இல : 011–2434990, தொலைநகல் இல : 011–2344720


**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**ALL CEYLON HINDU CONGRESS**

To:

**General Secretary**
All Ceylon Hindu Congress
No. 91/5, Sir Chittampalam,
A. Gardiner Mawatha,
Colombo - 02.

Telephone: 011-2434990 Fax: 011-2344720 Email: hinducongress@gmail.com Website:www.hinducongress.lk


UNIE ARTS (PVT) LTD. TEL: 0112330195